# IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| **MCOP No. 377/2024** | **நாள் – 16.04.2026** | **சாட்சி – ம.சா.1** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேஸ்வரி | கணவர் பெயர் | அறிவழகன் |
| ஊர் | திருபுவனம் | தாலுக்கா | திருவிடைமருதூர் |
| தொழில் | கூலி வேலை | வயது | 39/2026 |

**முதல் விசாரணை:**

நான் அசல் மனுவில் மனுதாரர் ஆவேன். மனுதாரர் தரப்பு சாட்சி 1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல்நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

1. 17.07.2024–ம் தேதியிட்ட விபத்து பதிவேடு பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1
2. 17.07.2024–ம் தேதியிட்ட சடலகூராய்வு அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.2
3. 19.07.2024–ம் தேதியிட்ட TN 63 N 2616 பதிவெண் கொண்ட எதிர்மனுதாரர் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.3
4. 06.12.2024 தேதியிட்ட TN 68 AH 3145 பதிவெண் கொண்ட இறந்த முகிலன் சென்ற வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.4
5. விபத்து நடந்த சம்பவ இடத்தின் மாதிரி வரைபடம் இணையதள நகல் ம.சா.ஆ.5.
6. 18.06.2025 குற்ற இறுதி அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.6

7. 22.10.2025 இறந்த முகிலனின் வாரிசு சான்றிதழ் இணையதள பதிவிறக்க நகல் ம.சா.ஆ.7

8. 1ம் மனுதாரர் அறிவழகனின் இறப்பு சான்று கணினி நகல் ம.சா.ஆ.8.

9. 1ம் மனுதாரர் அறிவழகனின் வாரிசு சான்று கணிணி நகல் ம.சா.ஆ.9.

மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

<u>**எதிர்மனுதாரர் குறுக்குவிசாரணை**</u>

விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது கணவர் புகார் கொடுத்தார் என்றாலும் அவர் பிறகு இறந்து விட்டார் என்றாலும் சரிதான். எனது மகன் ஓட்டிசென்ற இருசக்கர வாகனம் யாருக்கு சொந்தமானது என்றால் ஆகாஷ் என்பவருக்கு சொந்தமானது. எனது மகன் சென்ற இருசக்கரவாகனத்தை யார் ஓட்டிசென்றது என்றால் என் மகன் தான். ம.சா.ஆ.6 குற்ற இறுதி அறிக்கையில் இருசக்கரவாகனத்தில் 3நபர்கள் பயணித்தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் செல்லும் போது 3 நபர்கள் சென்றார்கள் மற்றும் விபத்து சமயத்தில் 2 நபர்கள் மட்டுமே இருசக்கரவாகனத்தில் வந்தார்கள். ம.சா.ஆ.4 மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் ஓட்டுநர் உரிமம் மற்றும் காப்பீடு பாலிசி சமர்பிக்கபடவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது மகனுக்கு வயது என்னவென்றால் 18 முடிந்து 19 நடந்தது. எனது மகன் கொத்தனார் வேலை பார்த்ததற்கான மற்றும் வருமானத்தை காட்டுவதற்கான எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தை கேள்விபட்டு தான் சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சரிதான். விபத்துக்கு காரணம் எனது மகன் சென்ற வாகனத்தில் 3 நபர்கள் சென்றது தான் காரணம் என்றால் சரியல்ல. எனது மகன் விபத்து சமயத்தில் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரிதான். 16.07.2024 அன்று TN 63 N 2016 அரசு பேருந்தை சிதம்பரத்திலிருந்து கும்பகோணத்தை நோக்கி இரவு 09.10 மணிக்கு நடையெடுத்து

கும்பகோணம் நோக்கி சீரான வேகத்திலும் ஹாரன் அடித்து கொண்டும் சாலை விதிகளை அனுசரித்தும் கவனமாக ஓட்டுநர் ஓட்டி வந்து கொண்டிருக்கும்பொழுது விபத்து நடந்ததாக கூறப்படும் இரவு 11 மணியளவில் கரிக்குளம் குப்பை கிடங்கு அருகே பேருந்திற்கு எதிர் திசையில் அதிவேகமாகவும் அஜாகிரதையாகவும் TN 68 AH 3541 பதிவெண் கொண்ட Hero Passion Pro என்ற இருச்சக்கரவாகனத்தில் வந்தவர்கள் தலைக்கவசம் அணியாமல் அரசு பேருந்தை பார்த்து திடீர் என்று பிரேக் போட்டதால் அங்கு குவிக்கப்பட்டிருந்த சரளை கற்கள் மீது சருக்கி வேகத்தை கட்டுபடுத்த முடியாமல் பேருந்தின் முன்பகுதியில் விழுந்து விபத்தை ஏற்படுத்திகொண்டார்கள் என்றால் சரியல்ல. வழக்கில் இருசக்கரவாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எதிர் மனுதாரர் அரசு நிறுவனம் என்பதால் கூடுதல் இழப்பீடு பெறுவதற்காக பிரமாண வாக்குமூலத்தில் தவறான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழு காரணம் என் மகனின் அஜாகரதை மற்றும் கவனக்குறைவு காரணம் என்றால் சரியல்ல. நான் விபத்தின் நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல. அரசு பேருந்து ஓட்டுநர் மீது எவ்வித தவறும் இல்லை என்பதால் எதிர் மனுதாரர் நிறுவனம் இழப்பீடு எதுவும் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.04.16 05:30:05 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*

**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 377/2024** | **நாள் – 16.04.2026** | **சாட்சி – ம.சா.2** |

*Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Act 44 of 1969).*

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | தந்தை பெயர் | விநாயகம் |
| ஊர் | கோட்டூர் | தாலுக்கா | திருவிடைமருதூர் |
| தொழில் | கூலி வேலை | வயது | 45/2026 |

**முதல் விசாரணை:**

மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆக சாட்சியம் அளிக்கிறேன். மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். முதல்நிலை சாட்சியத்திற்கான பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது.

**எதிர்மனுதாரர் குறுக்குவிசாரணை**

விபத்தில் இறந்தவர் எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவருக்கும் எனக்கும் பழக்கம் இல்லை. எனக்கு எந்த ஊர் என்றால் கோட்டூர். விபத்தில் இறந்தவர் எந்த ஊரை சேர்ந்தவர் என்றால் பாக்கனாம் தோப்பு ஆகும். எனது ஊருக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் இடையே உள்ள தூரம் என்ன வென்றால் 15 அல்லது 16கிலோ மீட்டர் வரும். நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால் கூலி வேலை பார்க்கிறேன். விபத்து சம்பந்தமாக காவல் துறையினர் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். காவல் துறையினர் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. விபத்து நடந்த இடம் கும்பகோணம் மயிலாடுதுறை சாலை என்றாலும் அதிக போக்குவரத்து மிகுந்த இடம் என்றாலும் சரிதான். கரிக்குளம் அருகே மெட்வே மருத்துவமனை முன்பு

வாகனங்கள் வேகமாக வருவதை தடுப்பதற்காக பேரிக்கார்ட்டு தடுப்பு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம் மனுதாரர் விபத்து குறித்து நான் பார்த்ததை சாட்சியம் அளிக்குமாறு என்னிடம் நேரடியாக வந்து கேட்டுக்கொண்டதாக எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் அடிப்பட்டவரை மருத்துவமனையில் நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் இருந்திருந்தால் காவல் துறையினர் என்னிடம் வாக்குமூலம் பெற்று என்னை சாட்சியாக இறுதி அறிக்கையில் காட்டிஇருப்பார்கள் என்றாலும் நான் சம்பவ இடத்தில் இல்லாததால் தான் இறுதி அறிக்கையில் சாட்சியாக காட்டபடவில்லை என்றாலும் விபத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் மனுதாரர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.04.16 05:30:18 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*